# சட்ட விரோத பணப் பரிமாற்றம் 400% அதிகரிப்பு

**புதுதில்லி, நவ. 21:** சட்ட விரோதமாக நடைபெற்றுள்ள பணப் பரிமாற்றம், கள்ளத்தனமான பணப் புழக்கம் இந்தியாவில் 400 சதவீதம் அதிகரித்துள்ளதை நிதித் துறை புலனாய்வுப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

கடந்த நிதியாண்டில் மட்டும் 17 ஆயிரம் தடவை சட்ட விரோத பணப் பரிமாற்றம் நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து செயல்படும் தீவிரவாத அமைப்புகளுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் பணம் சட்டவிரோதமாக பரிமாறிக் கொள்ளப்படுகிறது. இதுபோல் இந்தியாவில் ஊழல் மூலம் பெற்ற பணம், கறுப்புப் பணம் ஆகியவை வெளிநாடுகளுக்கு கள்ளத்தனமாக அனுப்பப்படுகிறது. இந்தியாவில் இவ்வாறு சட்டவிரோதமாகப் பரிமாறப்படும் பணத்தின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதையடுத்து இதுபோன்ற சட்ட விரோத பணப் பரிமாற்றத்தை கண்காணித்து கண்டுபிடிக்க நிதித்துறை புலனாய்வுத் துறை முடுக்கிவிடப்பட்டுள்ளது. இந்தியாவில் இதுபோன்ற சட்ட விரோத பணப் பரிமாற்றங்கள் பெரும்பாலும் வங்கி வழியாக நடந்துள்ளதும் தெரிய வந்துள்ளது.

இதுபோன்ற சட்டவிரோத பணப் பரிமாற்றங்கள் மீது சிபிஐ, அமலாக்கத் துறை போன்ற அமைப்புகள் எடுத்த நடவடிக்கைகள் பற்றி விவரங்கள் ஏதுமில்லை.

கடந்த 2008-09-ம் ஆண்டில் இதுபோன்று நடைபெற்ற சட்ட விரோத பணப் பரிமாற்றத்தின் எண்ணிக்கை 4,409. இது ஒரே ஆண்டில் 4 மடங்கு உயர்ந்துள்ளது. இதிலிருந்து இந்திய நிதி அமைப்புகள் மூலம் இந்தியாவுக்குள்ளும் வெளிநாட்டுக்கும் பெரும் அளவில் சட்ட விரோத பணப் பரிமாற்றம் நடந்துள்ளது உறுதியாகி உள்ளது.

குறிப்பிட்ட சில சட்டவிரோத பணப் பரிமாற்றம் குறித்து நடவடிக்கை எடுக்க அமலாக்கப் பிரிவினருக்கும் சிபிஐக்கும் விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளன என்று நிதித்துறை அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வங்கிகள் வழியாக நடைபெற்றுள்ள சட்ட விரோத பணப் பரிமாற்றம் முந்தைய ஆண்டுகளை ஒப்பிடுகையில் 160 சதவீதம் அதிகரித்துள்ளது. வங்கிகள் உள்ளிட்ட நிதி அமைப்புகள் மூலம் நடைபெற்றுள்ள முக்கிய பணப் பரிமாற்றங்களை தோண்டி எடுத்து விசாரிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வங்கிகள் தவிர பிற நிதி அமைப்புகள் மூலம் நடந்த பணப் பரிமாற்றம் 2,872 ஆகும்.

சந்தேகத்துக்குரிய முறையில், சட்டவிரோதமாக நடைபெறும் பணப் பரிமாற்றங்கள் குறித்து அரசுக்கும், புலனாய்வு அமைப்புகளுக்கும் தகவல் கொடுக்குமாறு நிதி அமைப்புகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு வரும் தகவல்கள் விசாரணைக்காக அமலாக்கப் பிரிவு, சிபிஐ, வருமான வரித்துறை உள்ளிட்ட பல்வேறு சட்ட அமலாக்க அமைப்புகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகின்றன. இதில் புலனாய்வு அமைப்புகள் விசாரணை நடத்திய உரிய நடவடிக்கைக்கு வழி செய்யப்படுகிறது.

வெளிநாட்டிலிருந்து பயங்கரவாதிகளுக்கு வரும் பணம் பங்குச் சந்தை வழியாக இந்தியாவுக்குள் கடத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு ஏற்கெனவே உள்ளது.

கடந்த ஆண்டு வங்கிகள் உள்ளிட்ட எல்லா நிதியமைப்புகள் மூலம் மொத்தம் 1.83 லட்சம் கோடி முறை பணப் பரிமாற்றம் நடந்துள்ளது. இதில் ஒவ்வொரு பரிமாற்றமும் குறைந்தது ₹ 10 லட்சம் கொண்டதாக உள்ளது. இதன் மூலம் ₹ 18 லட்சம் கோடி பணம் பரிமாறப்பட்டுள்ளது. இதில் அரசுத் துறை வங்கிகளில் மிக அதிகமாக 1 கோடியே 5 லட்சம் பணிப் பரிமாற்றங்கள் நடந்துள்ளன. தனியார் வங்கிகள் மூலம் 65 லட்சமும் வெளிநாட்டு வங்கிகள் மூலம் 3 லட்சமும் கூட்டுறவு வங்கிகள் மூலம் 9 லட்சமும் பணப் பரிமாற்றம் நடந்துள்ளது. 2009-10ம் நிதியாண்டில் ₹ 10 கோடிக்கும் அதிகமாக நடைபெற்ற பணப் பரிமாற்றத்தின் எண்ணிக்கை 1 லட்சத்து 27 ஆயிரமாகும். கள்ள நோட்டு புழக்கம் அரசுத்துறை வங்கிகளை விட தனியார் வங்கிகளில் அதிகமாக உள்ளது.